DINAKARAN

20 NOV 2021

PAGE 2

# புதுவை பல்கலை தொலைதூரக்கல்வி ஆன்லைன் சேர்க்கை வலைதளம்




புதுவை பல்கலைக்கழக தொலைதூரக்கல்வி இயக்குனரகத்தின் புதிய இணையதளம் மற்றும் ஆன்லைன் சேர்க்கை வலைதளத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்தார்.

## துணைவேந்தர் தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, நவ. 20: புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைதூரக்கல்வி இயக்குனரகம் (டிடிஇ) 2020 வரை 5 எம்பிஏ பட்டங்கள், 4 முதுகலை பட்டம், 2 இளங்கலை படிப்புகளை வழங்கி வருகிறது. பல்கலைக்கழகத்தின் இணைந்த கல்லூரிகளில் கல்வி மற்றும் தொழிற்கல்வி திட்டங்கள் முறையான (அ) வளாகத்தில் உயர்கல்வியை தொடர முடியாத மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இது செயல்படுகிறது. 2021 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் மொத்தம் 20 டிகிரி திட்டங்களுக்கு டிடிஇ ஒப்புதல் பெற்றது. இதில் சந்தைப்படுத்தல், நிதி, மனிதவள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள், விநியோகச்சங்கிலி மேலாண்மை, மருத்துவமனை மேலாண்மை ஆகிய 4 எம்பிஏ பட்டங்களும் அடங்கும். ஆங்கிலம், இந்தி, சமூகவியலில் எம்.காம்., (நிதி) மற்றும் எம்ஏ உள்ளிட்ட முதுகலை பட்டங்களும், 8 இளநிலை பட்டங்களும் (பிபிஏ, பி.காம்., பிஏ ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் இதழியல், மக்கள்தொடர்பு) அடங்கும். கொரோனா தொற்று நிலைமை காரணமாக, இந்த ஆண்டு சேர்க்கைகள் தாமதமாகி கடந்த 17ம் தேதி தொடங்கியது.

இதன் தொடக்க நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குனரக இயக்குனர் சி.கே.ராமையா, 20 பட்டப்படிப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தார். புதுவை பல்கலை துணைவேந்தர் குர்மீத் சிங், இயக்குநர், பதிவாளர், நிதி அதிகாரி, சிடிசிடீன், டிஜிஎம், இந்தியன் வங்கி கிளை மேலாளர், டிடிஇ-ன் அனைத்து ஊழியர்களின் முன்னிலையில் டிடிஇ இணையதளம் மற்றும் ஆன்லைன் சேர்க்கை வலைதளத்தை தொடங்கினர்.